ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

02.01.2025

1. அன்னதான மகா சக்தி தன்னை
அரங்கன் யான் உலக மக்களும்
எண்ணம் வழி கடைப்பிடித்துமே
யுகம்தனில் கடைத்தேற்றம் காண

2. காணவே பிரணவக் குடிலெனும்
கருணைமிகுந்த சபை படைத்து
ஞானமோடு தானவழிகாட்டி வர
நம்பிக்கை கொண்டு வாரீரென

3. வாரீரென அழைத்துமே அருளாசி
வழங்குவேன் குரோதி சிலை திங்கள்
வாரமான சூலவாம் குருவார அருளாசி
வையகத்தார் தருமபலம்பெற உரைப்பேன்

4. உரைக்கவே அரங்கன் என் குடில்
உலகையே ஞான வழி மாற்றி
அறத்தின் வழி மக்களெல்லாம்
ஆபத்தின்றி வாழ அருள் செய்யும் குடில்

5. குடில் தனில் ஞானிகள் படை
குறைவிலா நடக்கும் அன்னதான
இடர்வெல்லும் அருளமுதை கண்டு
இனிதே சக்தியூட்டி காத்து வர

6. வருகவே அருளமுதை உண்டு
வணங்கி சரவண சோதியை
முருகா அரங்கா என வேண்டி
முடிந்த வண்ணம் அன்னதான பணிக்கு

7. அன்னதான பணிக்குப் பொருளுதவி
அனைவரும் செய்து கொண்டு
எண்ணமெல்லாம் குருவே என
என்னிடம் சரணாகதி கொண்டு வர

8. வருகவே மக்களுக்கு இனிதே
வரம்பல தந்து அரங்கனும்
பெருமைபட பொருள் வளம்பட
புண்ணிய பலம் ஆயுள்பலம் கூட

9. கூடவே வந்த ஆங்கில புத்தாண்டில்
குறைவிலா வளம்பல கூட்டி
இடர் என்பதே கிரக வழியும்
எதிரி வஞ்சம் பகைமை அணுகா

10. அணுகா ருண ரோக அல்லலிலா
ஆயுத கண்டம் சகடை கண்டமிலா
ஞானமும் தேக மனபலமும்
நிரம்பிய அமைதி ஆனந்தம் கூடிய

11. கூடிய மக்கள் படைகளாக
குருவரங்கன் என் ஞானப்படைகளாக
தடையற அருளியே அற்புதம் படைப்பேன்
தரணியையே காத்தருள்புரிவேன் அரங்கனென்
குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி